**<u>02.09.2025</u>**

STC.No. 07/2019 ஜார்ஜ் மார்ட்டின் த/பெ. பிச்சை PW1

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரிகள் தரப்பில்)</u>**

எனக்கு எதிரி சசிகலாவை நன்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி சசிகலாவின் மகன் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. எதிரி சசிகலாவின் கணவர் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் தான் எனது வழக்கறிஞருக்கு விவரம் சொன்னேன் என்றால் சரிதான். எனது வழக்கறிஞரின் பெயர் என்னவென்றால் ரமேஷ். வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரி வீட்டின் கதவு எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. எதிரி எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் இடையாற்று மங்கலம் அக்ரஹாரம் தெருவில் வசித்து வருகிறார். எதிரிக்கும், எனக்கு எவ்வாறு பழக்கம் ஏற்பட்டது என்றால் நான் இடையாற்று மங்கலத்தில் விவசாய தொழில் செய்து வருகிறேன். அதன் மூலம் பழக்கம் ஏற்பட்டது. இடையாற்று மங்கலத்தில் எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது என்றால் இல்லை, எனது சகலையின் நிலம் உள்ளது. எனது சகலையின் பெயர் ஜான்சன். எனது சகலையின் பெயரில் உள்ள நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. மொத்த அளவு 4 1/2 ஏக்கர் ஆகும். நான் அவ்வாறு விவசாயம் செய்ததற்கு எனது பெயரில் அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அடங்கல் எனது சகலையின் பெயரில் தான் உள்ளது. எதிரி எதற்காக என்னிடம் பணம் வாங்கினார் என்றால் அவசர தேவைக்காக என்னிடம் கடன் பெற்றார். மருத்துவ தேவைக்காக வேண்டுமென்று என்னிடம் கடன் பெற்றார். பணம் கொடுக்கும் போது ஆவணம் எழுதி வாங்குவது பழக்கம்

என்றால் நான் கைமாற்றாக பணம் கொடுத்தேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு எங்கு நிலம் உள்ளது என்றால் பம்பரம்சுற்றி கிராமத்தில் 2 1/2 ஏக்கர் இடமும், பூவாளூர் கிராமத்தில் 4 ஏக்கர் நிலமும், மாந்துறை கிராமத்தில் 2 ஏக்கர் நிலமும் உள்ளது. மாந்துறை என்ற கிராமமே இல்லை என்றால் சரிதான். அது நெருஞ்சலக்குடி பஞ்சாயத்தை சேர்ந்தது. என்னுடைய இடங்களின் சர்வே எண் என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த இடங்களின் வருவாய் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனக்கு மேற்சொன்னவாறு நிலங்கள் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எந்த தேதியில் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் 27.10.1998 அன்று கடன் கொடுத்தேன். சாட்சி மீண்டும் தானாக முன்வந்து 27.10.2018 அன்று சாட்சியம் அளித்தார். நான் உண்மையிலேயே எதிரிக்கு கடன் கொடுக்காத காரணத்தினால் தான் தேதியை தவறுதலாக சொல்லிவிட்டு பின்பு மீண்டும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய புகார் மனுவில் எதிரியின் கதவு எண் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரியின் முகவரி பெரியார் பிரைன் என்பவர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் அவரிடம் எதிரியின் முகவரி குறித்து விசாரித்தேன். எந்த ஒரு நபரும் வீட்டின் முகவரியோ, அதற்கான ஆதாரமோ வாங்காமல் கடன் கொடுக்கமாட்டார் என்றால் எனக்கு எதிரியை நன்கு தெரியும் என்பதால் கடன் கொடுத்தேன். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எனது வங்கி கணக்கில் ரூ.3,00,000/− இருந்ததற்கான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. எனது கையில் இருந்த தொகையை தான் எதிரிக்கு

கொடுத்தேன். இந்த வழக்கு காசோலை எதிரி பெரியார் பிரைன் என்பவரிடம் கடன் வாங்கும்போது எதிரியால் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பெரியார் பிரைன் என்பவருக்கும், எதிரிக்கும் இடையே வேறு வழக்குகள் உள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. பெரியார் பிரைன் என்ன தொழில் செய்கிறார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. அவர் எனது உறவினர் என்பதால் தெரியும். அவர் திருமண மண்டபம் வைத்துள்ளார் என்றால் சரிதான். அவரிடம் குமார் என்கிற நபர் வேலை செய்கிறாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எனக்கும், பெரியார் பிரைன் என்பவருக்கும் என்ன உறவுமுறை என்றால் அவர் எனது மகன் உறவுமுறை ஆவார். அந்த உறவுமுறையை கொண்டு தான் என்மூலமாக எதிரி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், எனக்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கு வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். எனக்கு வரும் வருமானத்தை வங்கி கணக்கில் போட்டு எடுப்பது வழக்கம் என்றால் சரிதான். எனது வங்கி கணக்கை பரிசோதித்தால் எனது வரவு, செலவு குறித்து தெரியும் என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் அவ்வளவு தொகை கொடுப்பதற்கு என்னிடம் போதிய பணம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரி வழக்கு காசோலையை நிரப்பி கையெழுத்திட்டு என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2016 ம் ஆண்டு பெரியார் பிரைன் என்பவரிடம் வாங்கிய கடனுக்காக எதிரி வழக்கு காசோலையையும், புரோநோட்டையும் கொடுத்தார் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை சம்மந்தமாக எதிரி என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து காவல் நிலையத்தில்

என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்தார்கள் என்றாலும், நான் நீதிமன்றத்தின் மூலம் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னேன் என்றாலும் சரியல்ல. எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 25.01.2019 அன்று அனுப்பினேன். பெரியார் பிரைன் என்பவர் சொல்லி தான் எதிரியின் முகவரி குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. நான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும், எதிரி என்னிடம் வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும், அதனால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றம் புரியவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகார் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.09.02 19:15:00 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி